இணைப்பு–III

[176ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 10

வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

அறிவிப்புகள், 2009-2010

1. சேலத்தில் ஒருங்கிணைந்த வணிக வரித் துறை கட்டடம்

சேலத்தில் முன்பு பொது மருத்துவமனைக்கருகில் பெரிய வளாகத்தில், சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த 15 அலுவலகங்களும் இப்போது அரசு பொது மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி விரிவாக்கத்திற்காக காலி செய்யப்பட்டு பல இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இது பொதுமக்களுக்கும் வணிகப் பெருமக்களுக்கும் பணியாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் சிரமமாக உள்ளதாய் உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பல்வேறு நலத் திட்டங்களை சேலத்தில் கடந்த 19—9—2007 அன்று துவக்கி வைத்து, அடிக்கல் நாட்டிய விழாவில், சேலம் கோட்ட வணிக வரி அலுவலகங்களுக்கான ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுவதற்கு ரூ.10 கோடி அளிப்பதாக அறிவித்தார்கள். இப்பணி தொடர்பாகப் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலம் அஸ்தம்பட்டி கிராமத்தில் கண்டறியப்பட்டு, அந்நிலத்தினை கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இக்கட்டடத்தில் 15 வணிக வரி அலுவலகங்களுக்காக ஒருங்கிணைந்த புதிய கட்டடம் கட்டப்படும்.

2. ஒரே முறை தீர்வுத் திட்டம்

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றில் 31—3—2002 வரை கேட்பு எழுப்பப்பட்டு தற்போது நிலுவையிலுள்ள வரிகளைத் தீர்வு செய்ய ஒரேமுறை தீர்வுத் திட்டம் அவசரச் சட்டம் எண் 7/2008 இன்மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு 1—11—2008 முதல் 31—1—2009 வரை நடைமுறையில் இருந்தது. இதன் பிறகு 31—3—2009 வரை இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பங்களைப் பதிவு செய்ய பல்வேறு வணிகர்

[2009 ஜூலை 8

சங்கங்கள் கோரின. எனவே, வணிகர்கள் சங்கங்களின் கோரிக்கையை பரிசீலித்து அரசாணை எண் 4, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 28-1-2009 இன்படி இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பங்களைப் பதிவு செய்ய காலக் கெடுவினை 31—3—2009 வரை நீட்டித்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 31—3—2009 வரை 9,673 வணிக பெருமக்கள் பயன்பெற்று ரூபாய் 73.19 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு நீட்டிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பல்வேறு வணிகர்கள் இத்திட்டத்தின் பலனை அனுபவித்து வரி நிலுவைகளை செலுத்திட இயலாமல் போயிற்று எனவும், அதனால், இத்திட்டத்தை மேலும் 3 மாதங்களுக்கு அவகாசம் வேண்டும் என்றும் கோரிக்கை வரப்பெற்றுள்ளது. இதை ஏற்று மீண்டும் ஒரு மூன்று மாதகாலம் அவகாசம் வழங்கப்படும்.

3. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006 பிரிவு 18(3) இன்கீழ் ஏற்றுமதியாளருக்கு கால அளவு குறித்த சட்டத்திருத்தம்

மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 18(3) ன்கீழ் ஏற்றுமதியாளர்கள் கொடுத்த உள்ளீட்டு வரியை திரும்பப் பெறுவதற்கான கோரிக்கையினை உள்ளீட்டு வரிவரவு எடுத்துக்கொண்ட நாளிலிருந்து 180 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், ஏற்றுமதி செய்வதற்குக் கொள்முதல் செய்ததிலிருந்து 180 நாட்களுக்கு மேலும் பல நேரங்களில் அமைந்து விடுவதால் இந்த கால அளவினை ஏற்றுமதி நாளில் இருந்து 180 நாட்கள் என்றே கருதவேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று தற்போது உள்ள "from the date of accrual of such input tax credit" என்ற சொற்றொடர், கொள்முதல் செய்த 180 நாட்களிலிருந்து என்றே பொருள் கொள்ள முடியும் என்ற துறை அலுவலர்களின் செயல்பாட்டால், ஏற்றுமதியாளர்கள் உள்ளீட்டு வரி வரவைத் திரும்பப் பெருவதில் உள்ள சிரமத்தை நீக்க, "from the date of zero rate sale" என்று மாற்றி தெளிவுபடுத்த மதிப்புக் கூட்டு வரி சட்டப் பிரிவு 18(3) இன்கீழ் உரிய சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படும்.

4. வணிக வரித் துறையின் கணினிமயமாக்குதல் போன்ற அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய முழுமையான திட்டம்

மின் ஆளுமைக்கு செயல்வடிவம் கொடுக்க இத்துறையில் உள்ள அனைத்து அலுவலகங்களும், தணிக்கைச் சாவடிகளும்

2009 ஜூலை 8]

கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இருந்தாலும், மாறி வருகின்ற கணினி தொழில்நுட்பம், இணைய வசதிகள், மென்பொருள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவ்வப்பொழுது சட்டத்தின்கீழும் நிர்வாகத்தின் கீழும் தேவைப்படும் மாற்றத்தை உடனே செயல்படுத்த ஏதுவாகவும், அவ்வப்பொழுது அதற்காக நிதி கேட்டு பலமுறை துறை அரசை அணுகுவதைத் தவிர்ப்பதற்கும், கணினிகள் மற்றும் கணினி சார்ந்த கருவிகளில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை நீக்குவதற்கு செய்யப்பட வேண்டிய வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்த (Annual Maintenance Contract) செலவினங்களைத் தவிர்க்கவும், பொதுமக்களுக்குத் தடையில்லாத சேவையை நல்கிடவும் எல்லா வசதிகளையும் உள்ளடக்கிய முழுமையான மின் ஆளுமைத் திட்டம் வேண்டியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, சேவை வழங்குபவரும், அரசும் பகிரிந்துகொள்ளும், பொதுத் துறை—தனியார் பங்கேற்பு (PPP) அடிப்படையில், மின் ஆளுமையின் அனைத்துச் சேவைகளையும் வழங்கும் முழுமையான திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் கணினிகள், கணினி சார்ந்த கருவிகள், கணினி இணைய இணைப்புகள், வரி விதிப்பு ஆணைகள், அறிவிப்புகள் போன்றவற்றை வணிகர்களுக்கும், மற்றவர்களுக்கும், சார்வு செய்யும் பணிகள், அலுவலகங்களுக்குத் தேவைப்படும் கணினி தொடர்பான பொருட்கள் மற்றும் எழுதுபொருட்கள் வழங்குதல், அலுவலகங்கள் மற்றும் தணிக்கைச் சாவடிகளில் உள்ள தகவல்களைக் கணினியில் ஆங்காங்கே அவ்வப்போது பதிவு செய்தல், கோப்புகளைக் கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ப இணைய அமைப்பு, வன்பொருள் மற்றும் மென்பொருட்களை வடிவமைத்தல் ஆகிய எல்லா பணிகளையும் உள்ளடக்கியதாக (Comprehensive) இருக்கும். வணிகர்கள் அலுவலகத்திற்கு வரவேண்டிய சூழ்நிலைகளைத் தவிர்த்து, இணையதளம்மூலம் நிகழ் நிலையில் உடனுக்குடன் இந்த சேவைகளைத் தனியார்கள்மூலம் தொடர்சேவை புரியும் வகையில், ஒரு திட்டம் இத்துறையில் செயல்படுத்தப்படும்.

5. தணிக்கைச் சாவடிகளில் படப்பிடிப்புக் கருவிமூலம் கண்காணிப்பு முறை

தணிக்கைச் சாவடிகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் தற்போது கணினிகள், பல்வகை பயன்பாட்டுக் கருவிகள் (Multi Functional Devices) அகண்டவழி இணையதள இணைப்பு, தமிழ்நாடு மாநில விரிபரப்பு பிணைய இணைப்பு (TNSWAN) போன்ற வசதிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டு தணிக்கைச் சாவடிகளில் நிற்காமல் செல்கின்ற வாகனங்களைக் கண்காணித்து மேல்நடவடிக்கை எடுக்க ஏதுவாகவும், தணிக்கைச் சாவடிப் பணிகளைக் கண்காணிக்கவும், வலைதளப் படப் பதிவுக் கருவிகள் (Web Cameras) பொருத்தப்படும்.

6. மின்னணு முறையில் வரி செலுத்தும் திட்டம்

வணிகர்கள் தங்களது மாதாந்திரப் படிவங்களை எந்த நேரத்திலும், எந்த இடத்தில் இருந்தும் தாக்கல் செய்வதற்கு நிகழ்நிலை வசதி உள்ளது. தற்போது மின் ஆளுமையின் சேவைகளாக வணிகர்கள் மின்னணு முறையில் வரிசெலுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வணிக வரி ஆணையரால் மின்னணு முறையில் வரி செலுத்த ஆணையிடப்படும் வணிகர்களில், முந்தைய ஆண்டில் ரூ.200 கோடி மற்றும் அதற்கு மேலும் வரி விதிப்பிற்குரிய விற்பனைத் தொகை உள்ளவர்கள் தங்களது மாதாந்திரப் படிவங்களை மின்னணு முறையில் வரி செலுத்திய ஒப்புகையுடன் ஒவ்வொரு மாதமும், 14 ஆம் தேதிக்குள்ளும், ஏனைய வணிகர்கள் தங்களது மாதாந்திரப் படிவங்களை மின்னணு முறையில் வரி செலுத்திய ஒப்புகையுடன் ஒவ்வொரு மாதமும் 22 ஆம் தேதிக்குள் தாக்கல் செய்யவும், இத்திட்டம் வணிகர்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

7. மதிப்புக் கூட்டு வரி தணிக்கைக் கையேடு

தமிழ்நாடு அரசு புதிய தொழில்களைக் கொண்டு வருவதிலும், அவற்றை ஊக்குவிப்பதிலும் முனைப்பாக செயல்பட்டுவருகிறது. மதிப்புக் கூட்டு வரியின் பயன்கள் கருதி, பெரிய தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் அண்டை மாநிலங்களுக்கு வசதிகளுக்காக இடம் பெயர்வதைக் கருத்தில் கொண்டு, புதிதாகத் தொழிற்சாலை தொடங்குவோரைத் தமிழகத்தில் தொடங்க ஊக்குவிப்பதற்காகவும், அதனால் நமது மாநில பொருளாதாரம் வளரவும், செழிக்கவும், ஏனைய மாநிலங்களோடு இணைந்து செயல்படுவதற்காகவும், மதிப்புக் கூட்டு வரி முறை தமிழ்நாட்டில் 1—1—2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் தொடங்கிய பின் உற்பத்தியும் வணிகமும் வளரும் போது இந்த வரி விதிப்பு முறை சீரிய முறையில் செயல்படுத்தப்படுகிறதா என்பதையும், வரியும் வளர்கிறதா என்பதையும், அறிந்துகொள்ள தணிக்கை இன்றியமையாதது. வணிக

2009 ஜூலை 8]

இட தணிக்கையாகவோ, வணிக ஆவணங்களின் தணிக்கையாகவோ, இருக்கலாம்.

தணிக்கையின்போது, அலுவலர் கடைபிடிக்க வேண்டிய சட்டங்கள், விதிமுறைகள், நடைமுறைகள் போன்றவற்றைப் பயிற்றுவிக்கும் வகையில் வணிக வரித் துறைக்கான 'மதிப்புக் கூட்டு வரி தணிக்கைக் கையேடு' (VAT AUDIT MANUAL) தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தணிக்கை நடைமுறை நூலானது இத்தணிக்கை மேற்கொள்வதற்கும், சட்ட நெறிகளை சரியாகக் கடைபிடிக்கவும், இது அனைத்து மதிப்புக் கூட்டு வரி முறையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கும் பேருதவியாக இருக்கும். இக்கையேடு துறையிலுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்கப்படும்.

8. தமிழ்நாடு மாநில விரிபரப்புப் பிணையம் (TNSWAN) மூலம் நிகழ்நிலை காட்சிக் கருத்தரங்க வசதி (Video Conferencing)

தமிழ்நாடு மாநில அளவிலான விரிபரப்புப் பிணையத்தில் இத்துறையின் அலுவலகங்கள் அனைத்தும் இணைக்கப்படும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. ஆணையர் மற்றும் இணை ஆணையர் அலுவலகங்களுக்கு இவ்விணையத்தில் வலைதள படக் கருவிகள் பொருத்தப்பட்டு நிகழ்நிலை காட்சிக் கருத்தரங்கு (Video Conferencing) வசதி ஏற்படுத்தப்படும். இதன்மூலம் ஆணையர் மற்றும் இணை ஆணையர் அலுவலகங்களுக்கு இடையே கருத்துப் பகிர்வுகளும், தெளிவுரைகளும், அலுவலர்களின் பணித்திறன் தொடர்பான ஆய்வுக் கூட்டங்களும் நிகழ்நிலையில் நடைபெறும். மேலும், இதனால் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களுக்காக உயர் அலுவலர்கள் தொலைதூரம் பயணம் செய்ய வேண்டிய அவசியமும், தலைமையிடத்தை விட்டுச் செல்ல வேண்டிய சூழ்நிலையும் தவிர்க்கப்படும்.

9. அனைத்து வணிக வரித் துறை அலுவலர்களுக்குக் கைபேசி வழங்கும் திட்டம்

வரி ஏய்ப்பு மற்றும் வாகன இயக்கம் குறித்த தகவல்களைப் பரிமாறிக்கொள்ள செயலாக்கப் பிரிவில் உள்ள இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் சுழற்படை அலுவலர்களுக்குக் கைபேசி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் வரி விதிப்பு

[2009 ஜூலை 8

வட்ட தலைமை அலுவலர்கள் அனைவருக்கும் மொத்தம் 391 கைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் அலுவலர்கள் தகவல் பரிமாற்றம், சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுதல், வணிகர்களுக்கு இடையேயான பரிமாற்றங்களை குறுக்குத் தணிக்கை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளலாம். வணிக பெருமக்கள் தங்களுடைய சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளவும், வணிக வரிச் சட்டங்களின் நடைமுறைகளில் தெளிவுரை பெற்றுக்கொள்ளவும், வரி விதிப்பு அலுவலர்களை நேரடியாக தொடர்புக் கொள்ள பயன்படும். மேலும், இது வணிகர்களுக்கானச் சேவைகளை மேம்படுத்தவும், வரி நிர்வாகத்தைத் திறம்பட நடத்தவும் பயன்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS